**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 305/2011**

திரு. பழனிசாமி (D.W –3) **28.7.2025**

<u>7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் முறையீடு இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு தரப்பில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. 7.9.1960 ம் தேதிய ஆவணத்தின் படி என்ன என்ன சொத்துக்கள் எந்த விஸ்தீரணத்தில் உள்ளது என்பது தெரியுமா என்றால் சர்வே எண். 115/9, 10 சொத்தில் 1.80 ஏக்கர் பூமி உள்ளது. 1960 ம் வருட பத்திரத்தில் மொத்த விஸ்தீரணம் மற்றும் உட்பிரிவுகள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த சொத்தில் வருவாய் ஆவணங்களான பட்டாவை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரி. பட்டாபடி சொத்துக்களின் விஸ்தீரணம் தெரியாது என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் சுப்பையாகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். 1960 ம் வருட ஆவணத்தில் லட்சுமி மற்றும் ராமாத்தாள் கையொப்பம் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

2. வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் உரிமையும் பாத்தியமும் உள்ளதால் அவர்களிடம் இருந்து கையொப்பம் பெறாமல் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் அவர்களை கட்டுப்படுத்தாது தாவா சொத்துக்களில் அவர்களுக்கு பாகம் உள்ளது என்றால் தவறு. உயில் ஆவனத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளது செல்லாது அந்த உயில் மூலம் வாதி 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை கட்டுப்படுத்த முடியாது என்றால் சரியல்ல. தாவா நிலுவையில் உள்ளது எனக்கு தெரியும் என்றால் சரி. இந்த தாவா

நிலுவையில் இருந்த போது தான் உயில் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரி. 24.1.2013 ம் தேதிய உயில் ஆவணம் செல்லாது என்றால் தவறு.

3. தாவா சொத்தில் வாதி உன்னப் பிரதிவாதிக்கு உள்ள உரிமையை தடுப்பதற்காகவே உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு நான் உடந்தையாக இருந்து சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் தவறு.

1, 3, 18 முதல் 21 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.28 18:44:37 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.